**தலைப்பு 112 – வெளிநாட்டு அமைச்சு - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 112 - வெளிநாட்டு அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 ஆம் ஆண்டில் மின்வலு மற்றும் வலுசக்தி அமைச்சுக்கு கையளிக்கப்பட்ட ரூபா 16,000,000 ஆன வாகனம் ஒன்று மற்றும் 2020 ஆம் ஆண்டில் விற்றுத் தீர்க்கப்பட்ட ரூபா 21,250,000 ஆன 05 வாகனங்கள் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், | கையளிக்கப்பட்ட, விற்றுத் தீர்க்கப்பட்ட மற்றும் இரு முறை பதிவிடப்பட்ட வாகனங்களின் பெறுமதியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி நிலைமைக் கூற்றில் வாகனத்தின் பெறுமதி சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 4,200,000 ஆன வாகனமொன்று நிதி நிலைமைக் கூற்றில் இரு தடவை பதியப்பட்டிருந்தது. | | |
| (ii) | 10 வாகனங்கள் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், வாகன இலக்கம் இன்றிய வான் ஒன்றுக்காக ரூபா 252,730 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. | வாகனங்களின் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்து சிகாஸ் வாகன நிரலில் உள்ளடக்குதல் மற்றும் ரூபா 252,730 பெறுமதியான சிகாஸ் வாகன நிரலை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி நிலைமைக் கூற்றில் வாகனத்தின் பெறுமதி சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் 66 வெளிநாட்டு தூதரகங்களின் ரூபா 12,302,725,029 ஆன மீண்டெழும் செலவினம் மற்றும் ரூபா 39,229,873 ஆன மூலதன செலவினங்கள் என்பவற்றுக்கான கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தூதரகங்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களையும் கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ii) | ரூபா 3,736,755 கூட்டுத் தொகைகக்காக பாதுகாப்பு வைப்பு/ செயல் நிமித்த உப கட்டுநிதி பதிவழித்தல்/ தீர்த்தல்களுக்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பித்ததாக குறிப்பிடப்பட்ட போதிலும், ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | திறைசேரியில் இருந்து கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 11,508,887,742 தொகைக்கான மற்றும் ரூபா 7,264,782,498 ஆன ஏனைய நிதி மூலங்களில் இருந்து கட்டுநிதி பெறுவனவுகளுக்கான பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இதில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | **7002-0-0-35-13 என்ற கட்டுநிதி கணக்கு** | | |
| (i) | கட்டுநிதி கணக்கின் மீதி 2013 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய தீர்க்கப்படாத முற்பணங்களை உள்ளடக்கியிருந்ததுடன், முன்னைய ஆண்டின் ரூபா 89,919,237 ஆன கட்டுநிதி மீதி மீளாய்வாண்டில் ரூபா 3,958,719 அதாவது 4.4 சதவீதம் ஆன சிறிய சதவீதம் மாத்திரம் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி கணக்குகளுக்குரிய சகல மீதிகள் தொடர்பான தகவல்களை கண்டறிந்து விரைவாக தீர்த்து வைப்பதற்காக குழுவொன்று நியமித்து புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தீர்க்கப்படாத முற்பணங்களை விரைவாக அறவிட்டு தீர்த்து வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வெளிநாட்டு தூதரகங்களின் வேலைக்காக வெளிநாடு சென்ற பதவியணியினருக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புகளில் ரூபா 55,619,842 ஆன 242 வைப்புக்கள் பயன்படுத்தப்படாத வீடுகளுக்குரியதாக இருந்தது. அதில் ரூபா 12,296,875 தொகை 20 வருடங்களை விஞ்யிருந்ததுடன், ரூபா 39,482,801 ஆன தொகை 10 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான வீச்சிலும், ரூபா 3,840,166 ஆன மிகுதி தொகை 09 வருடங்களையும் விஞ்சியிருந்தது. அந்த வைப்புகளை அறவிடுதல் தொடர்பாக வெளிநாட்டு அமைச்சின் வெளிநாட்டு தூதரக கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் நாயகத்தால் 2009 செப்டம்பர் 01 ஆம் திகதிய 250 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை மூலம் ஆலோசனை வழங்கப்பட்ட போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அந்த வைப்பு பணத்தை மீள பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற தகவல்களை மீளாய்வு செய்து மீதியை தீர்த்து வைத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே அண்மைய காலங்களில் வைப்புச் செய்யப்பட்ட பாதுகாப்பு பிணை வைப்பில் அனேகமானவை உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பை அறவிடுவதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்க வேண்டியிருந்ததுடன், தீர்க்கப்படாத முற்பணங்களை விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |
| (iii) | பணி நிறைவுபெற்றவுடன் செயல்நிமித்த உப கட்டு நிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், தீர்க்கப்படாத கட்டுநிதியில் ரூபா 29,861,398 ஆன 127 செயல்நிமித்த உப கட்டுநிதிகள் காணப்பட்டன. அதில் ரூபா 699,358 | இதில் குறிப்பிடப்பட்ட 03 விடயங்களுக்குரிய ரூபா 3,736,756.00 பெறுமதி கணக்கீட்டு வழுவின் அடிப்படையில் எழுந்திருந்தமை இனங்காணப்பட்டிருந்ததுடன், உரிய தூதரகங்களின் மூலம் கணக்கீடு செய்து | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு தீர்க்கப்படாத முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கும், தேவையான சரிசெய்தல்களை தாமதம் இன்றி |

| | | | |
|---|---|---|---|
| | தொகை 20 வருடங்களை விஞ்சி இருந்ததுடன், ரூபா 12,834,946 ஆன தொகை 10 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கு இடையிலான வீச்சிலும், ரூபா 16,327,094 ஆன மிகுதி தொகை 08 வருடங்களையும் விஞ்சி இருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | **7002-0-0-35-22 கட்டுநிதி கணக்கு** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த கட்டுநிதி கணக்கின் மீதியில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 364,525,410 ஆகும். வெளிநாட்டு தூதரகங்களில் சேவைக்காக வெளிநாடு சென்ற பதவியணியினர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புக்களில் ரூபா 62,637,985 தொகை தூதரகங்களில் பதவியணியினர்கள் குடியிருக்காத வீடுகளுக்காக வைக்கப்பட்ட 108 வைப்புக்கள் ஆகும். அதில் ரூபா 2,237,738 தொகை 20 வருடங்களையும், ரூபா 14,338,555 தொகை 10 வருடங்களையும் விஞ்சியிருந்தது. மேலும், ரூபா 22,712,529 ஆன முற்பணம் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பை தீர்த்து வைப்பதற்காக தற்போது தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிநாட்டு தூதரகங்களின் உத்தியோகத்தர்களின் சேவை முடிவடையும் சந்தர்ப்பங்களின் போது வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புக்களை அறவிடுவதற்கான திட்ட முறைமையொன்று தயாரிக்க வேண்டியிருந்ததுடன், தீர்க்கப்படாத முற்பணங்களை விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மூடப்பட்டுள்ள 04 தூதரகங்களின் பதவியணியினர்கள் குடியிருக்காத வீடுகளுக்காக வைக்கப்பட்ட தீர்த்து வைக்கப்படாத வைப்பு தொகை ரூபா 19,573,769 ஆக காணப்பட்டது. | சட்ட ரீதியான மற்றும் நிர்வாக ரீதியான தேவைகளின் பிரகாரம் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் மீதிகளை தீர்த்து வைத்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். | விரைவாக வைப்புக்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | தீர்க்கப்படாத முற்பணத்தில் ரூபா 17,486,532 ஆன செயல்நிமித்த உப கட்டுநிதியாக இருந்ததுடன், அதில் 20 வருடங்களை விஞ்சிய ரூபா 2,526,120 தொகையும், 10 வருடங்களை விஞ்சிய ரூபா 2,227,286 தொகையும் மற்றும் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 5,458,192 தொகையும் காணப்பட்டது. | செயல்நிமித்த உப கட்டுநிதியை தீர்த்து வைத்தல் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் தீர்த்து வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு தீர்த்து வைக்கப்படாத முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதி பிரமாணம் 371 இன் பிரகாரம் உப கட்டுநிதி வழங்கப்படுகின்ற பணிகள் நிறைவு பெற்றவுடன் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நட்ட இழப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்ட 02 வெளிநாட்டு தூதரகங்களுக்கு உரியதாக வழங்கப்பட்ட ரூபா 548,054 கூட்டுமொத்தமான தீர்க்கப்படாத முற்பணங்களுக்காக 09 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையிலான கால வீச்சை எடுத்திருந்தது. | மீண்டும் மீளாய்வு செய்து நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு தீர்த்து வைக்கப்படாத முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமைகள்** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 571 | 699,419 | வைப்பு செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்கள் வரை உரித்துக் கோரப்படாத வைப்புக்கள் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்க வேண்டிய போதிலும், ரூபா 699,419 கூட்டுத் தொகையான 06 வைப்புக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பணி நடைமுறை விதிக் கோவையின் 142 ஆம் பந்தி. | 12,917,591 | அரசாங்கத்தின் உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் இருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக விடுவித்தல் உரிய நியமன அதிகாரியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய போதிலும், அமைச்சின் மூலம் லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், | லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்திற்காக எதிர்காலத்தில் முறையான பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான விடயங்கள் | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்திற்கு அவ்வாறு முறையாக விடுவிக்கப்படாத உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு சம்பளமாக ரூபா 12,917,591 தொகை அமைச்சினால் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டு காணப்படுகின்ற மையினால் அந்த செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் முறையான பிரகாரம் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 2016 சனவரி 08 ஆம் திகதிய 01/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மற்றும் 2019 யூலை 22 ஆம் திகதிய 01/2016(i) ஆம் இலக்க சுற்றறிக்கை | 3,796,550 | அரசாங்கத்திற்கு தேவையான அவசியமான சேவைகளை வழங்குவதற்காக 2021 ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் உபாய வழி தொடர்பாடல் அலகொன்றில் 05 உத்தியோகத்தர்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்தது. சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் இவ்வாறான பணிகளுக்கான கொடுப்பனவு தினங்கள் 90 ஐ விஞ்சாத ஒப்பந்தத்திற்காக மாத்திரம் வரையறுக்க வேண்டியிருந்த போதும் ஒரு வருடத்திற்காக இந்த உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் மொத்த ஒப்பந்த பணிகளுக்காகவும் வழங்கக் கூடிய | இந்த தொழில் தகைமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட படிகள் அவர்களின் தகைமைகளுடன் ஒப்பிடும் போது போதியளவாக இல்லாமையினால் சம்பளத்தின் அடிப்படையில் சேவையாற்றுவதற்கு அவர்கள் இணங்கியிருந்தனர். இது தொடர்பாக சனாதிபதி செயலாளரின் வழிகாட்டல் மற்றும் உதவி எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆகக் கூடிய படி ரூபா 150,000 ஆக இருந்த போதிலும், மொத்த ஒப்பந்தத்திற்காகவும் ரூபா 3,796,550 செலவிடப்பட்டிருந்தது. | | |
| (iv) | 2015 யூலை 23 ஆம் திகதிய 07/2015 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் 08 vii ஆம் பந்தி | 716,784 | ஒவ்வொரு மாதத்தின் பங்களிப்பு பணம் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்புவதற்கு திட்டமிட வேண்டியிருந்த போதிலும், 2022 யூன் 30 ஆம் திகதி பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 716,784 பங்களிப்பு பணம் அவ்வாறு அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்த திகதியில் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மாதாந்த பங்களிப்பு பணம் அனுப்புவதற்கு வசதியீனமாக இருந்ததுடன், அந்த நிலுவை பணத்தை அனுப்புவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 வங்கி கணக்கு செயற்பாடுகள்**

வங்கி கணக்கு செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத அமைச்சு மற்றும் காணப்பட்ட | நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இராஜாங்க அமைச்சின் ரூபா 6,509,030 ஆன 120 காசோலைகள் மற்றும் வெளிநாட்டு தூதரகம் ஒன்றில் அ.டொலர் 2,500 பெறுமதியான காசோலையொன்று தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையான காலத்தில் அமைச்சில் ரூபா 1,003,884 தொகையான 14 காசோலைகள் மற்றும் 2010 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கென்பரா மற்றும் பேர்லின் தூதரகங்களில் வைப்புச் செய்யப்பட்ட 05 காசோலைகள் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தேறியிருக்கவில்லை. | தகவல்களை கண்டறிந்து சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வைப்புச் செய்யப்பட்ட போதும் தேறாதிருந்த காசோலைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் செப்டம்பர் முதல் மீளாய்வாண்டின் நவம்பர் வரையான காலத்தில் இனங்காணப்படாத வரவாக அமைச்சில் ரூபா 3,185,169 தொகை மற்றும் இரண்டு வெளிநாட்டு தூதரகங்களில் 2000 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான கால வீச்சில் இனங்காணப்படாத வரவாக 12 காசோலைகள் காணப்பட்டது. | அமைச்சில் இனங்காணப்படாத வரவு மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தூதரகங்களில் காசோலைகள் தொடர்பாக இனங்கண்டு கணக்கீடு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத வரவுகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் முதல் மீளாய்வாண்டின் நவம்பர் வரையான காலத்தில் வங்கி கணக்கிற்கு நேரடியாக மேற்கொள்ளப்பட்ட | இனங்காணப்படாத செலவினை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இனங்காணப்படாத செலவுகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவுகள் ரூபா 5,620,093 இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | லொஸ் என்ஜலஸ் தூதரகத்தில் 2011 ஆம் ஆண்டின் போது களவாடப்பட்ட அ.டொலர் 1,583 தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தை களவாடிய நபரிடம் இருந்து அறவிடுவதற்கு முடியாதிருந்தமையால் நட்டத்தை பதிவழிப்பதற்காக விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்குமாறு தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | களவு போன பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | நிதிப் பிரமாணம் 395(ஆ) இன் பிரகாரம் 05 தூதரகங்களில் 07 கணக்குகளுக்காக வங்கி இணக்கு கூற்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வங்கி இணக்கக் கூற்று கிடைத்ததன் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட கொழும்பு 08. எல்விட்டிகல மாவத்தை, 117 வத்தை மாடி வீட்டுத் தொகுதியில் 17 வீட்டு அலகுகளுக்காக உரித்துறுதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட 17 வீடுகளுக்காக உரித்துறுதி வழங்குமாறு கோரப்பட்டிருந்ததுடன், உரிய நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் காணப்படுகின்றது. | ஆதனங்களின் உறுதித் தன்மை அமைச்சுக்கு கையளித்தல் வேண்டும். |

### 3.2 நட்டம் மற்றும் இழப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கையின் தூதரங்களுக்காக தொடர்ந்தும் அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ அல்லது கைவிடுவதற்கோ உள்ள நட்டங்களில் ரூபா 19,640,441 தொகை 10 வருடங்களை விஞ்சியிருந்ததுடன், அதில் ரூபா 16,141,919 நட்ட இழப்பு தொடர்பாக எடுக்கப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை . 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடையிலான கால வீச்சில் காணப்படுகின்ற தீர்க்கப்படாதுள்ள நட்ட இழப்புக்களின் பெறுமதி ரூபா 1,275,303 ஆகும். | நட்டம் மற்றும் இழப்புக்களாக அறிக்கையிடப்பட்டுள்ள இந்த பெறுமதி மீண்டும் மீளாய்வு செய்து நடவடிக்கைகளை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தீர்த்து வைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். | நட்ட இழப்புக்களை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 2,469,849 கூட்டுத் தொகையான வீடுகளின் 12 பாதுகாப்பு வைப்புக்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அதற்காக 08 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான கால வீச்சியை எடுத்திருந்தது. | விரைவாக தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வீட்டு பாதுகாப்பு வைப்புக்களை கால ரீதியில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது பிட்டோரியா வெளிநாட்டு தூதரகத்தில் ஏற்பட்ட ரூபா 606,827 கூட்டுத் தொகையான 02 வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் மற்றும் 03 வெளிநாட்டு தூதரகங்களில் 04 சம்பவங்களுக்குரிய ரூபா 259,800 காணாமல் போணமை தொடர்பாகவும் நிதிப்பிரமாணம் 104(i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 606,827 நட்டத்தை பதிவழித்தல் தொடர்பாக குழுவின் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் , ரூபா 259,800 நட்ட இழப்பை பதிவளிப்பதற்கு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிப் பிரமாணம் 106 இன் பிரகாரம் பற்றாக்குறை, பொருத்தமற்ற பயன்பாடு அல்லது ஏனைய விடயங்களினால் பணம், முத்திரை, பற்றுச் சீட்டுக்கள் போன்றவை தொலைந்து போகும் இடத்து அவ்வாறு காணாமல் போன தொகை உடனடியாக மீளளிப்பு செய்ய வேண்டிய போதிலும், இலண்டன் தூதரகத்தில் ரூபா 1,014,295 தொகை களவாடப்பட்டமை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நட்ட இழப்பு பதிவழிக்கும் குழுவினால் மீண்டும் மீளாய்வு செய்து நட்டத்தை பதிவழிப்பதற்கு அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய பணம் மீளளிப்பு செய்யப்படல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு தூதரகங்களில் காணப்படுகின்ற சுவிடன் மற்றும் கென்யா போன்ற நாடுகளில் இலங்கை அரசாங்கத்திற்குரிய கட்டிடங்கள் காணப்படுகின்ற போதிலும், அவற்றை பராமரிக்காமையின் காரணமாக உத்தியோகபூர்வ இல்லங்களின் | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | சொத்துக்களை ஆக்கபூர்வமான முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாடகையாக ரூபா 55,583,113 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | வெளிநாட்டு தூதரகங்களுக்காக பதவியணியினர்களை நியமிக்கும் போது ஒவ்வொரு நாடுகளின் பிரகாரம் உரித்தாக்கி முறையாக குறிகாட்டிகளை பகுப்பாய்வு செய்து அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு 2018 ஆகஸ்ட் 07 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குக் குழுவின் கட்டளை இலக்கம் 07 இன் மூலம் தீர்மானிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வர்த்தக திணைக்களம், தொழில் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மூலம் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்களுக்காக குறிகாட்டிகள் கோரப்பட்டுள்ளதுடன், இந்த அமைச்சின் உத்தியோகத்தர்களுக்காக குறிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றது. | அரசாங்கக் கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெறப்பட்ட கடன் முழுமையாக அறவிடுவதற்கு முன்னர் உத்தியோகத்தர் மரணமடைந்தால் அல்லது ஓய்வு பெற்றுச் சென்றால் அவரிடம் இருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய சகல பணமும் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 273,560 இனை உள்ளக்கிய மரணமடைந்த 07 உத்தியோகத்தர்களினது ரூபா 472,532 கடன் மீதி மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 962,265 கடன் மீதி என்பன தீர்த்து வைக்கப்படவில்லை. | மரணமடைந்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சேவையை விட்டுச் சென்ற 15 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 1,317,101 ஆன கடன் கடன் மீதி அறவிடவேண்டியிருந்ததுடன் அந்த கடன் மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 662,946 ஆகும். | 11 உத்தியோகத்தர்களிடம் இருந்து கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், ஏனைய உத்தியோகத்தர்களின் கடனை அறவிடுதல் தொடர்பான தகவல்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | சேவையை முடிவுறுத்திய 10 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 347,495 கடன் மீதி அறவிட வேண்டி காணப்பட்டதுடன், அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதி ரூபா 299,955 ஆகும். | சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தர்களிடம் இருந்து கடன் மீதியை அறவிடுவதற்காக 01/2020 சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தர்களிடம் இருந்து நிலுவை கடனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற 14 உத்தியோகத்தர்களின் ரூபா 1,499,176 ஆன இனங்காண முடியாத கடன் மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | இனங்காணப்படாத நிலுவை கடன் மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | சவுதி அரேபியாவில் வேலைவாய்ப்பிற்காக சென்ற நபர் ஒருவர் 2012 ஒக்டோபர் 24 ஆம் திகதி விபத்திற்கு உட்பட்டமையால் முழுமையாக ஊனமுற்ற நிலைக்கு உட்பட்டிருந்தார். அந்த விபத்து ஏற்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்தவொரு | வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சென்று விபத்துக்கு உட்பட்டு அல்லது மரணத்திற்கு உட்படுகின்ற நபர்களின் இழப்பீட்டு கோரிக்கை சம்பவங்கள் தொடர்பாக ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை | தூதரகத்தின் உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் செயற்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இழப்பீட்டு தொகையும் கிடைத்திருக்கவில்லை. இந்த கோவை 03 வருடங்களுக்கு அண்மித்த காலமாக அந்த நாட்டின் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் தொலைந்து போனமை தொடர்பாக கண்டறியாமை, குறித்துரைத்த வழக்கு தடவைகளுக்காக தூதுவர் அலுவலகம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்காமை மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது தனியார் சட்ட சேவை வழங்கும் நிறுவனத்திற்கு வழக்கினை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டு வரையும் அந்த பணிகள் நிறைவேற்றாதிருந்தமை போன்ற விடயங்கள் இந்த தாமதத்திற்கு பிரதான காரணமாக இருந்தது. | எடுப்பதற்காக மேலதிக செயலாளர் (கன்சயூலர்) அவரின் தலைமையில் குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன், இழப்பீட்டு சம்பவங்களுக்குரிய கோவை ஆரம்பம் முதல் ஆய்வு செய்து தேவையான மிகுதி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஏ) | குவைட் நாட்டின் வீட்டு பணியாளர் வேலைக்காக 2009 திசெம்பர் 19 ஆம் திகதி வெளிநாடு சென்ற நபர் ஒருவர் 2012 சனவரி 29 ஆம் திகதி மரணமடைந்திருந்ததுடன், இலங்கைக்கு எடுத்து வந்த அவரின் சடலம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திடீர் மரண பரிசோதனையின் பிரகாரம் மரணமடைந்தவரின் அங்கங்கள் அகற்றப்பட்டிருந்தமையும், சரீரத்தில் கீறல் காயங்கள் கணிசமான அளவு காணப்பட்டமையும் குறிப்பிடப்பட்டது. மரணம் ஏற்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இந்த மரணம் தொடர்பாக நீதிமன்ற மருத்துவ அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு தூதரகம் தவறியிருந்ததுடன், இந்த நபருக்காக எந்தவொரு இழப்பீட்டு தொகையும் பெற்றுக் கொள்ளும் இயலுமை தொடர்பாக ஆராயும் போது | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | தூதரக உத்தியோகத்தர்கள் செயற்திறனாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஐ) | 17 வருடங்கள் அளவிலான காலம் குவைட் நாட்டின் வீட்டுப் பணியாளர் சேவையில் இருந்த நபர் ஒருவர் 2011 ஒக்டோபர் 17 ஆம் திகதி பாதுகாப்புக்கூடம் ஒன்றில் மரணமடைந்திருந்தார். மரணமடைந்தவர் உயிருடன் இருக்கும் போது அவரின் முதலாளியினால் சிறுநீரகம் ஒன்று அகற்றப்பட்டமைக்கான குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையால் அதற்காக உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை பெற்றுக்கொள்வதற்கும் மரண விசாரணை அறிக்கை மற்றும் நீதிமன்ற மருத்துவ அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் நாயகம் (கன்சியூலர்) இனால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மரணம் ஏற்பட்டு 11 வருடங்கள் கடந்திருந்த போதிலும், அந்த அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு தூதரகம் தவறியிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | ஜித்தாவில் 2011 ஆம் ஆண்டின் போது மரணத்திற்கு உட்பட்ட நபரொருவரின் மரணத்திற்கான காரணம் தற்கொலையா அல்லது விபத்தினால் ஏற்பட்டதா என உறுதிப்படுத்துவதற்காக பொலிஸ் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையும் முடியாதிருந்ததுடன், காப்புறுதி மேவுகையை பெற்றுக் கொள்ளல் மற்றும் இழப்பீட்டு பணத்தை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக தூதரகம் செயற்திறனாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | ரியாத் வெளிநாட்டு தூதரகத்தில் 2012 ஆம் ஆண்டின் போது இழப்பீட்டு கோரிக்கை கோவை 2018 இன் பின்னர் நாளது வரையாக்கப்படாதிருந்தமையும், மீளாய்வாண்டு வரையிலும் 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இழப்பீட்டு உரித்து காணப்பட்டதா என உறுதிப்படுத்துதல் தொடர்பாக உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஔ) | வெளிநாட்டு அமைச்சின் மூலம் பொது மக்களுக்கு வழங்குகின்ற சேவைகளான க.பொ.த. (சா/தரம்), க.பொ.த. (உ/தரம்) பரீட்சை சான்றிதழ் மற்றும் பிறப்பு, விவாகம் மற்றும் இறப்பு சான்றிதழ்களை செயற்திறனாக மெய்மெய்யாய்வு செய்யும் வசதிகளுக்காக இலத்திரனியல் ஆவண சான்றுப்படுத்தும் முறைமை (e-DAS) பதிவாளர் நாயக திணைக்களம் மற்றும் பரீட்சை திணைக்களத்துடன் ஒன்றிணைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முறைமையினை அமுல்படுத்துவதற்காக சட்ட பிரிவின் உதவியுடன் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் , ஒன்றிணைத்தலை பூர்த்தி செய்வதற்காக பரீட்சை மற்றும் பதிவாளர் நாயக திணைக்களங்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்படுகின்றது. | திட்டமிடப்படுகின்ற செயற்பாடுகள் கால ரீதியில் நிறைவேற்றப்படல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 611 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 620 ஆக | சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதவியணியினர் தகவல்களுடன் இணங்குகின்றோம். | தேவையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன், வெற்றிட பதவிகள் 21 மற்றும் மிகைப் பதவிகள் 30 ஆகும். தூதரகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 528 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 370 ஆனமையால் வெற்றிட பதவிகள் 158 மற்றும் மேலும் தூதரகங்களில் இல்லாத பதவியணியினர் 582 பேர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் 403 ஆனமையால் வெற்றிடங்கள் 179 ஆக இருந்தது. | | |
| (ஆ) | அமைச்சில் இரண்டாம் நிலைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் முறையே 74 மற்றும் 169 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான எண்ணிக்கை முறையே 100 மற்றும் 194 ஆனமையால் மிகை 26 மற்றும் 25 ஆகும். | வெளிநாட்டு தூதரகங்களில் சேவையை பூர்த்தி செய்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வருகையின் காரணமாக மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன், 2024 இன் வருடாந்த இடம்மாற்றலின் மூலம் மிகை பதவியணியினரை முகாமைத்துவம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வேலை வாய்ப்பிற்காக வெளிநாடு சென்ற பட்டதாரிகள் வேலை செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பட்டதாரி பயிலுனராக நியமனம் கிடைத்த மற்றும் ஒன்றிணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்தால் இந்த அமைச்சுக்கு நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 20 பேர் இருக்கின்றமை. | மிகை ஊழியர் எண்ணிக்கைக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு புறம்பாக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளாதிருந்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் நாயக பதவிகளின் எண்ணிக்கை 09 ஆக இருந்த போதிலும், முறையான அங்கீகாரம் இன்றி பதிற்கடமைக்காக நியமிக்கப்பட்ட 10 பணிப்பாளர்களை உள்ளடக்கிய உள்ளபடியான எண்ணிக்கை 19 ஆகும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 09 பணிப்பாளர் நாயக பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதிகரிக்கின்ற வேலை அளவிற்கு போதிய அளவில் இல்லாமையினால் பதிற் கடமை பணிப்பாளர் நயாகத்தை நியமிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், பதவிகளின் அளவை அதிகரிக்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் பதிற்கடமைக்காக நியமித்தல் வேண்டும். |